Source: *Tamil Murasu*, p2
Date: 3 September 2021

# உலகத் தரவரிசையில் மேலும் முன்னேறிய என்யுஎஸ்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (என்யுஎஸ்), உலகத்தர வரிசையில் இதுவரை இல்லாத வகையில் நான்கு இடங்கள் முன்னேறி டைம்ஸ் உயர்கல்வி பட்டியலில் 21வது இடத்தைக் கைப்பற்றி இருக்கிறது.

கடந்த ஆண்டு அது 25வது இடத்தில் இருந்தது.

சிங்கப்பூரின் நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகமும் (என்டியு) இவ்வாண்டு ஓரிடம் முன்னேறி உலக அளவில் 46வது சிறந்த பல்கலைக்கழகமாக இடம் பிடித்துள்ளது.

டைம்ஸ் உயர்கல்வி, சிறந்த பல்கலைக்கழகங்களை பட்டியலிடுவதில் 2016ல் புதிய வழிமுறைகளை புகுத்தியது. அதன் பிறகு என்யுஎஸ், என்டியு ஆகிய இரண்டும் முதல் முறையாக சிறந்த இடத்தை கைப்பற்றியுள்ளன.

இவ்வாண்டு சாதனை அளவாக 99 நாடுகளைச் சேர்ந்த 1,662 பல்கலைக்கழகங்கள் வரிசைப்படுத்தப்பட்டன. கற்பித்தல், ஆய்வு, உலகளாவிய கண்ணோட்டம் உள்ளிட்ட 13 அம்சங்களின் அடிப்படையில் பல்கலைக்கழங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

ஆறாவது ஆண்டாக பிரிட்டனின் ஆக்ஸ்ஃபர்ட் பல்கலைக்கழகம் முதல் இடத்தை தக்க வைத்துக் கொண்டது. அமெரிக்காவைச் சேர்ந்த கலிஃபோர்னியா இன்ஸ்டியுயூட் ஆஃப் டெக்னாலஜியும் ஹார்வர்ட் பல்கலைக்கழகமும் சேர்ந்து 2வது இடத்தைக் கைப்பற்றி இருக்கின்றன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.